1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தெளிவான விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு

(அ) கோவையில் சில பகுதிகளில் மின்தடை ஏற்படுவதைத் தடுக்க புதிய டிரான்ஸ்பார்மர்கள் நிறுவ வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே. செல்வராஜ் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஆர். எஸ். புரம் வைசியர் வீதி, தடாளம் ரோடு, பெரிய கடைவீதி, ராஜவீதி போன்ற பகுதிகளில் மின்தடை ஏற்படுவதைத் தடுக்க புதிய டிரான்ஸ்பார்மர்கள் நிறுவ வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

கோவை மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் வைசியர் வீதி, பெரியகடை வீதி, ராஜவீதி போன்ற பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஏற்கனவே ஒவ்வொன்றும் 250 கே.வி.ஏ. கொள்திறன் கொண்ட மூன்று புதிய மின்மாற்றிகள் 1994ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டுள்ளன. இது தவிர தடாளம் ரோடு பகுதியில் இருந்த 100 கே.வி.ஏ. கொள்கிறன் கொண்ட மின் மாற்றிக்கு பதிலாக அதிகக் கொள்திறன் கொண்ட 150 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு 1994-ஆம் ஆண்டிலிருந்து இயக்கத்தில் உள்ளது. இம்மின்மாற்றிகள் நிறுவப்பட்ட பின்னர், மேற்கண்ட பகுதிகளில் மின்தடை ஏதும் இல்லாமல், மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர, கோயம்புத்தூர், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் அழுத்த மேம்பாட்டிற்காகவும், மின் தடை ஏற்படுவதைத் தவிர்க்கவும், 24 புதிய மின் மாற்றிகளை நிறுவுவதற்கும், 40 மின் மாற்றிகளின் கொள்திறனை அதிகப்படுத்தவும் ரூ. 1.25 கோடி செலவில் மதிப்பீடு அனுமதிக்கப் பட்டுள்ளது. இதற்கான வேலைகள் முடிக்கப்பட்ட பின்னர், கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின் தடை ஏதும் இல்லாமல் திருப்திகரமான அளவில் மின்சாரம் வழங்கப்படும்.

முற்பகல் 11-30

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதேபோல ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் 30 புதிய டிரான்ஸ்பார்மர்களை அமைத்துக் கொடுத்தார்கள். ஆனால், பெரிய கடைவீதி, வைசியர் வீதி, தடாளம் ரோடு, ஆர்.எஸ்.புரம் பகுதிகள் அதிகமான மின் உபயோகம் உள்ள பகுதிகளாக இருப்பதால், முக்கிய நகர்ப் பகுதிகளில் இப்போது மின்சாரம் முறையாக வழங்கப்பட்டு வந்தாலும்கூட, டிரான்ஸ்பார்மர்களினுடையே ஓல்டேஜ் தாங்காத காரணத்தால் விளக்குகள் எரிவதில்லை. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளிலுள்ள டிரான்ஸ்பார்மர்களைப் பிரித்து அந்த முக்கியப் பகுதிகளில் புதிதாக டிரான்ஸ்பார்மர்களை அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 280 கே.வி.ஏ. கொள்திறன் கொண்ட 3 புதிய மின்மாற்றிகள் 1994-லிலே நிறுவப்பட்டன. இவை தவிர, தடாளம் ரோடு பகுதியிலிருந்த 100 கே.வி.ஏ. கொள்திறன் கொண்ட மின்மாற்றிக்குப் பதிலாக அதிகக் கொள்திறன் கொண்ட 150 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு 1994-ஆம் ஆண்டிலிருந்து இயக்கத்தில் உள்ளது. அதற்குப்பிறகு அங்கே மின் நிலைமை சீரடைந்து இருக்கிறது. இது தவிர, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மின் அழுத்த மேம்பாட்டிற்காகவும், மின் தடை ஏற்படுவதைத் தவிர்க்கவும் 24 புதிய மின்மாற்றிகளை நிறுவுவதற்கும், 40 மின்மாற்றிகளின் கொள்திறனை அதிகப்படுத்தவும் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய்ச் செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் முடிக்கப்பட்ட பின்னர், கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் இதுபோன்ற மின்தடை ஏதும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 17]

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய இந்த மின் தடைகள் இல்லாமல் இருப்பதற்கு ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய்ச் செலவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தப் பகுதிகளில் மின் தடைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு மின்சார டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கின்றபோது ஆர்.எஸ்.புரம் பகுதியில் சுமார் 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரே சாலையாக உள்ளதால், அந்தப் பகுதியிலுள்ள டிரான்ஸ்பார்மர்களை மூன்றாகப் பிரித்து அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோவை மாநகராட்சியினுடைய கட்டுப்பாட்டிலே மின்வாரியத்தினுடைய மின் பகிர்மானம் இருந்து வந்தது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்கு அதை மின்வாரியத்தின் பொறுப்பிலே எடுத்துக்கொண்டு, மேம்பாட்டுப் பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம். இதுபோன்ற பணிகள் அரசினுடைய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னையிலிருந்து விமானம் மூலம் ஹஜ் பயணிகள் செல்வதற்கு இடைவெளியின்றி தேதிகளை மத்திய ஹஜ் கமிட்டி அறிவித்திருப்பதால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி. கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அரசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி. கே. மரியம் உல் ஆசியா.

* திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையிலிருந்து விமானம் மூலம் சுமார் 3,150 ஹஜ் பயணிகள் செல்வதற்கான தேதிகளை மாநில ஹஜ் கமிட்டியின் எதிர்பார்ப்புக்கு மாறாக மத்திய ஹஜ் கமிட்டி இடைவெளியின்றி அறிவித்திருப்பதால் ஹஜ் பயணம் செய்பவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை